பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

05 12 2024 **THURSDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வேளாண் பணிகளில் கூடுதல் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.
2. பிஎஸ்எல்வி சி-59 ராக்கெட் மூலம் **PROBA-3** செயற்கைக்கோள் வெற்றிகரமாக இன்று விண்ணில் செலுத்தப்பட்டது.
3. பல்லாவரம் அருகே கழிவுநீர் கலந்த குடிநீரை அருந்தியதால் உயிரிழப்பு ஏற்பட்டுள்ள சம்பவத்திற்கு மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.
4. அரசு கல்வி நிறுவனங்களின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 153 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.
5. செவித்திறன் குறைபாடு கொண்டவர்களுக்கான ஆசிய பசிபிக் விளையாட்டுப்போட்டியின் பேட்மிண்டன் பிரிவில் இந்தியா இரண்டு வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றது.

---- இனி விரிவான செய்திகள் ----

<<<<<<>>>>

வேளாண் பணிகளில் கூடுதல் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

புவனேஷ்வரில் உள்ள ஒடிஷா வேளாண் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் இன்று கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

தற்போதைய சவால்கள் மற்றும் இயற்கை பேரிடர்களை எதிர்கொள்வதற்கு ஏதுவான திட்டங்களை வேளாண் விஞ்ஞானிகள் வகுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

வேளாண் துறையின் பங்களிப்பின்றி வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்ட முடியாது என்றும் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

<<<<<<>>>>

பிஎஸ்எல்வி சி-59 ராக்கெட் மூலம் **PROBA-3** செயற்கைக்கோள் வெற்றிகரமாக இன்று விண்ணில் செலுத்தப்பட்டது.

ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து இன்று மாலை மணி நான்கு – நான்கிற்கு இது விண்ணில் செலுத்தப்பட்டது.

*(சவுண்ட் பைட் - 28 செகண்ட்ஸ்)*

விண்ணில் செலுத்தப்பட்ட இந்த ராக்கெட் திட்டமிட்ட நேரத்தில் செயற்கைக்கோள்களை புவிவட்ட பாதையில் நிலை நிறுத்தியதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய விண்வெளி முகமையின் இந்த இரண்டு செயற்கைக்கோள்கள், சூரிய ஒளிவட்டம் குறித்த ஆய்வினை மேற்கொள்ளும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த ராக்கெட்டை விண்ணில் செலுத்தியதற்காக இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் பாராட்டு தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>

சென்னையை அடுத்த பல்லாவரத்தில் குடிநீரில் கழிவுநீர் கலந்ததன் காரணமாக அதனை பயன்படுத்திய இருவர் உயிரிழந்தனர்.

இதன் காரணமாக பாதிக்கப்பட்ட 30-க்கும் மேற்பட்டோர் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - சுரேகா - 48 செகண்ட்ஸ்)*

இதற்கிடையே, பாதிக்கப்பட்டவர்களை நலம் விசாரித்த மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன், பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

பாதிக்கப்பட்ட பகுதியில் குடிநீர் விநியோகம் நிறுத்தப்பட்டு லாரியின் மூலம் குடிநீர் வழங்கப்படுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - மா. சுப்பிரமணியன் - 46 செகண்ட்ஸ்)*

இதற்கிடையே, கழிவுநீர் கலந்த குடிநீரை குடித்து உயிரிழப்பு ஏற்பட்ட சம்பவத்திற்கு மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், பாதுகாக்கப்பட்ட குடிநீரை கூட விநியோகம் செய்ய முடியாத நிலையில் திமுக அரசு உள்ளது என்பதையே இச்சம்பவம் வெளிப்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மழைக்காலங்களில் குடிநீரை பாதுகாப்பாக விநியோகம் செய்ய வேண்டியது அரசின் கடமை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், இந்த சம்பவத்தை மறைத்துவிடுவதிலேயே அரசு முனைப்புடன் உள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, மாநில அமைச்சர் திரு தா மோ அன்பரசன், மக்கள் சாப்பிட்ட உணவில் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக ஊடகங்களில் தெரிவித்திருப்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உணவில் பிரச்சினை என்றால் ஒரு வீட்டில் மட்டுமே பாதிப்பு ஏற்படும் என்றும், அந்த பகுதியில் அனைவருக்கும் வயிற்றுப்போக்கு எவ்வாறு ஏற்படும் என்றும் அவர் வினவியுள்ளார்.

<<<<<<>>>>

குடிநீரில் கழிவுநீர் கலக்காமல் இருப்பதையும், மாநிலம் முழுவதும் சீரான சுகாதாரமான குடிநீர் மக்களுக்கு வழங்கப்படுவதையும் திமுக அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>

தமிழகத்தில் உள்ள 31 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உட்பட பல்வேறு கல்வி நிறுவனங்களில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவற்காக 152 கோடியே 96 லட்சத்து 83 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக உயர்கல்வித்துறை அமைச்சர் திரு கோ. வி செழியன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ஆய்வகங்கள், வகுப்பறைகள் மற்றும் இதர வசதிகள் இந்த நிதியை பயன்படுத்தி மேம்படுத்தப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

காமராசர் கல்லூரி மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் அந்த செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராயம் வழக்கில் சிபிஐ விசாரணைக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதை எதிர்த்து, திமுக அரசு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருப்பது

கண்டனத்திற்குரியது என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், இவ்வழக்கின் விசாரணையை காலம் தாழ்த்தும் நோக்கில் திமுக அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கினை சிபிஐ விசாரிப்பதற்கு திமுக அரசு எதற்காக அஞ்சுகிறது என்றும் திரு எடப்பாடி பழனிசாமி வினவியுள்ளார்.

<<<<<<>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

திருவண்ணாமலையில் மண் சரிவு காரணமாக உயிரிழந்த ஏழு பேரின் குடுபத்தினருக்கு தலா ஐந்து லட்சம் ரூபாய் நிவாரண உதவியை மாநில அமைச்சர் திரு எ வ வேலு இன்று வழங்கினார்.

<<<<<>>>>

விழுப்புரம் மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் உயிரிழந்த 12 பேரின் குடும்பத்தினருக்கு தலா 5 லட்சம் ரூபாய் நிவாரண உதவியை வனத்துறை அமைச்சர் திரு பொன்முடி இன்று வழங்கினார்.

<<<<<<>>>>

பெரம்பலூர் மாவட்டம் கோனேரிப்பாளையத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சித்திட்டப்பணிகளை ஆட்சியர் திருமதி கிரேஸ் பச்சாவ் இன்று ஆய்வு செய்தார்.

<<<<<<>>>>

ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம் மாவட்டத்திற்கு பத்து லட்சம் ரூபாய் மதிப்பிலான நிவாரணப்பொருட்களை திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் திரு தர்பகராஜ் இன்று அனுப்பிவைத்தார்.

<<<<<<>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான பேருந்து நிலைய விரிவாக்கப்பணிகளுக்கான தொடக்க விழா ஆட்சியர் திரு பிரசாந்த் தலைமையில் இன்று நடைபெற்றது.

<<<<<<>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

செவித்திறன் குறைபாடு கொண்டவர்களுக்கான ஆசிய பசிபிக் விளையாட்டுப்போட்டியின் பேட்மிண்டன் பிரிவில் இந்தியா 2 வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றது.

மலேசியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், ஆடவர் ஒற்றையர் பிரிவில் அபினவ் சர்மா-வும், கலப்பு இரட்டையர் பிரிவில் **Jerlin Anika Jayaratchagan – Abhinav Sharma** இணையும் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

மகளிர் ஒற்றையர் பிரவில் **Jerlin Anika Jayaratchagan** -னும், மகளிர் இரட்டையர் பிரிவில் **Jerlin Anika Jayaratchagan – Aaditya Yadav** –இணையும், ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Piyush** –ம் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

**<<<<<<>>>>**

குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Mansi Singh,** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 17-21, 21-13, 21-9 என்ற செட் கணக்கில் சீன தை-பேயின் **Chen Su Yu**-வை வென்றார்.

**<<<<<<>>>>**

பிரிஸ்பேனில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

**<<<<<<END>>>>**